யபிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
20 10 2024 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி வாரணாசியில் 6 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

2. விவசாயிகளின் நலனை உறுதி செய்யும் வகையில் மத்திய மாநில அரசுகள் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. கலங்கரைவிளக்க சுற்றுலா, வேலைவாய்ப்பை அதிகரிக்க உதவிடும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

4. காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 32 பேர் உயிரிழந்தனர்.

5. உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

*<u>---- இனி விரிவான செய்திகள்---</u>*

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று உத்திரபிரதேச மாநிலம் வாரணாசி செல்கிறார்.

தமது சொந்த தொகுதியான வாரணாசியில் ஆறாயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளையும் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

இதனையொட்டி அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சுகாதாரம், கல்வி, சுற்றுலா, வேலைவாய்ப்பு, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மேம்பாட்டிற்கான புதிய திட்டங்களும் இதில் அடங்கும்.

வாரணாசி விமான நிலையத்தில் புதிய முனையம் அமைப்பதற்கான அடிக்கல்லையும் பிரதமர் நாட்டுகிறார்.

**Sigara** விளையாட்டரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் பிரதமர் கலந்துரையாடுகிறார்.

**<<<<>>>>**

நாட்டின் முன்னேற்றத்திற்கான உந்துசக்தியாக மனிதவளத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் கர்மயோகி இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கர்மயோகி தேசிய கற்றல் வாரத்தை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

மத்திய அரசு ஊழியர்களின் பணிசார்ந்த நடைமுறைகளை மேம்படுத்தும் வகையில் இந்த இயக்கம் செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பிரதமர் எடுத்துரைத்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இந்தியாவிற்கு வாய்ப்பாகவும், சவாலாகவும் உள்ளது என்று அவர் கூறினார்.

உலக அளவில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அரசு ஊழியர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

புதிய சிந்தனை, மக்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை ஆகியவற்றை பின்பற்றுவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

40 லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் **IGOT** இணையதளத்தில் பதிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசு ஊழியர்களின் தனிப்பட்ட செயல்பாட்டிற்கும், நிறுவன திறன் மேம்பாட்டிற்கும் இதுபோன்ற பயிற்சிகள் புதிய உத்வேகத்தை அளிக்கும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

**<<<<>>>>**

விவசாயிகளின் நலனை உறுதி செய்யும் வகையில் மத்திய மாநில அரசுகள் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற வேளாண் தேசிய மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், நடப்பாண்டில் 341 புள்ளி ஐந்து ஐந்து மில்லியன் டன் உணவு தானிய உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

ரசாயனம் மற்றும் உர பயன்பாட்டை குறைத்து, வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க, இயற்கை விவசாயம் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

வேளாண் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில் உற்பத்தி செலவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

இதனை செயல்படுத்தும் வகையில் நல்ல விளைச்சலுக்கான தரமான விதைகள் அடங்கிய சிறு தொகுப்பு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

வரும் ஆண்டுகளில் நாட்டின் மீன் ஏற்றுமதியை ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியா தற்போது 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மீன் உற்பத்தியில் உலகின் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

மாற்றுத்திறனாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையத்தில் வழங்கப்பட்டு வந்த புத்தகம் கட்டுநர்களுக்கான பிரத்யேக பயிற்சி, தொடரும் என்று கூறினார்.

பார்வைக் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கக் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று, இந்த பயிற்சியை நிறுத்துவதற்கான அரசாணை விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாற்றுதிறனாளிகளின் மேம்பாட்டிற்காக மாநில அரசின் பட்ஜெட்டில் ஆயிரத்து 370 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

**<<<<>>>>**

தேசிய மகளிர் ஆணைய தலைவராக திருமதி **Vijaya Rahatkar** நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிப்பை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலத்தின் மகளிர் ஆணைய தலைவராகவும், அவுரங்காபாத் மேயராகவும் இவர் பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினராக டாக்டர் அர்ச்சனா மஜூம்தார் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

கலங்கரைவிளக்க சுற்றுலா, வேலைவாய்ப்பை அதிகரிக்க உதவிடும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

ஒரிசா மாநிலம் பூரியில் நடைபெற்று வரும் இரண்டாவது தேசிய கலங்கரைவிளக்கத் திருவிழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், நாட்டின் கடல்சார் வரலாறு குறித்து எதிர்கால தலைமுறையினர் அறிந்துகொள்ள இது வழிவகுக்கும் என்று தெரிவித்தார்.

கடல்சார் பாதுகாப்பு உத்திகள், பாரம்பரிய சுற்றுலாத்தலங்களைப் பாதுகாப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கருத்தில்கொண்டு இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

**<<<<>>>>**

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 32 பேர் உயிரிழந்தனர். 85 பேர் காயமடைந்தனர்.

**Haifa** மற்றும் வடக்கு இஸ்ரேல் நகரங்களைக் குறிவைத்து லெபனான் நடத்திய ராக்கெட் தாக்குதல்களை இடைமறித்து அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் இஸ்ரேலைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாக அந்நாட்டு சுகாதார சேவை அமைப்பு கூறியுள்ளது.

<<<<>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 66 வேட்பாளர் அடங்கிய முதல் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

முன்னாள் முதலமைச்சரும் அம்மாநில பிஜேபி தலைவருமான திரு. பாபுலால் மராண்டி, தன்வர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

முன்னாள் முதலமைச்சர் திரு. சம்பை சோரன், **Saraikella** தொகுதியில் போட்டியிட உள்ளார்.

மொத்தம் 68 தொகுதிகளில் பிஜேபி போட்டியிடுகிறது.

அம்மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை பிஜேபியின் மத்திய தேர்தல் குழு இறுதி செய்துள்ளது.

81 உறுப்பினர்களைக் கொண்ட அம்மாநில சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 13 மற்றும் 20ஆம் தேதிகளில் தேர்தல் நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 23ஆம் தேதி நடைபெறும்.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலம் நாராயண்பூர் மாவட்டத்தில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் பாதுகாப்புப் படையினர் 2 பேர் வீர மரணம் அடைந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தல் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 2 வீரர்கள் காயமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாராயண்பூர் மாவட்டத்தில் இந்தோ-திபெத் எல்லை பாதுகாப்புப் படை மற்றும் ரிசர்வ் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இந்த குண்டுவெடிப்பு நடந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது. துபாயில் நடைபெறும் இப்போட்டி, இந்திய நேரப்படி இரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் தில்லி அணி முதல் இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 43 ரன் எடுத்தது.

தில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 674 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

<<<<>>>>

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

மலேசியாவில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 1.35 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

அல்மாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அர்ஜுன் கதே – ரித்விக் இணை கொலம்பியாவின் **Nicolas Barriento –** துனிஷியாவின் **Skander Monsouri** இணையை எதிர்கொள்கிறது.

கஜகஸ்தானில் நடைபெறும் இப்போட்டி இன்று பிற்பகல் 12.30 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பெங்கால் அணி – ஜெய்ப்பூர் அணியையும், குஜராத் அணி – பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் தமிழக அணி – தெலுகு அணியையும், புனே – ஹரியானாவையும் வென்றன.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் முகமதன் அணி – கேரளா அணியை எதிர்கொள்கிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் மோகன் பஹன் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியையும், மும்பை அணி – கோவா அணியையும் வென்றன.

<<<<>>>>

சிட்னி சர்வதேச பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Alap Mishra** தோல்வியடைந்தார்.

<<<<>>>>

**Czech** ஓபன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சித்தார்த் குப்தா தோல்வியடைந்தார்.

**<<<<The End>>>>**